ப.ரா. சம்பத், இ.ஆ.ப.,
முதன்மைச் செயலாளர்/
மாற்றுத் திறனாளிகளுக்கான
மாநில ஆணையர்

மாநில வள மற்றும் பயிற்சி
மைய வளாகம்,
கே.கே.நகர்,
சென்னை–600 078.

நே.மு.க.எண்.17/மா.தி.மா.ஆ./2012 நாள் 5.3.2012

அன்பார்ந்த திரு. சந்திரகுமார்,

மாற்றுத் திறனாளிகளுக்கான தமிழக அரசு செயல்படுத்தி வருகின்ற பல்வேறு நலத் திட்டங்கள் தங்களுக்கு தெரிய வந்திருக்கும் என நம்புகிறேன்.

தமிழ்நாடு உடல் ஊனமுற்றோர் சங்கங்களின் கூட்டமைப்பு அளித்துள்ள கோரிக்கை மனுவினை இத்துடன் தங்கள் பார்வைக்கு இணைத்துள்ளேன்.

அனைத்து திருக்கோயில்களிலும் மாற்றுத் திறனாளிகளுக்கு எந்தவிதமான கட்டணமின்றியும் இலவசமாக திருமணம் செய்துகொள்ள அதில் கோரிக்கை விடுக்கப்பட்டுள்ளது.

மாற்றுத் திறனாளிகளுடைய திருமணத்திற்கு தமிழக அரசு ரூ.25,000/– மற்றும் திருமாங்கல்யம் செய்வதற்கு 4 கிராம் தங்கமும், பட்டயப் படிப்பு அல்லது பட்டப் படிப்பு முடித்த மாற்றுத் திறனாளிகளின் திருமணத்திற்கு ரூ.50,000/– மற்றும் திருமாங்கல்யம் செய்வதற்கு 4 கிராம் தங்கமும் தமிழக அரசால் வழங்கப்பட்டு வருகிறது.

இந்நிலையில், மாற்றுத் திறனாளிகளின் திருமணங்களை இந்து சமய அறநிலையத் துறையின்கீழ் வருகின்ற திருக்கோயில்களில் எந்தவிதமான கட்டணமும் இன்றி, இலவசமாக செய்வதற்கு அரசுக்கு பரிந்துரைக்குமாறு நான் கேட்டுக்கொள்கிறேன்.

மேலும், இந்து சமய அறநிலையத் துறையின்கீழ் வரும் திருக்கோயில்களின் திருமண மண்டபங்களில் மாற்றுத் திறனாளிகள் திருமணம் செய்ய விரும்பினால், திருமண மண்டப கட்டணத்தில் 50 சதவீத கட்டணச் சலுகை அளிக்கலாம் என மாற்றுத் திறனாளிகள் நலத்துறை பரிந்துரை செய்கிறது. இதன்மூலம் வசதியற்ற ஏழை மாற்றுத் திறனாளிகள் தமிழக அரசு வழங்கும் திருமண நிதியுதவியுடன் அவர்கள் திருமணத்தை நடத்திக்கொள்வதற்கு ஒரு சிறந்த வாய்ப்பாக இருக்கும் என மாற்றுத் திறனாளிகள் நலத் துறை கருதுகிறது.

எனவே, இத்துறையின் கருத்தினை ஏற்று, விரைவில் அரசாணை பெற்றுத் தருமாறு தங்களை இத்துறை கேட்டுக்கொள்கிறது.

தங்கள் உண்மையுள்ள,

PRSampath
7.3.12

(ப.ரா. சம்பத்)

பெறுநர்

திரு. ஜெ. சந்திரகுமார், இ.ஆ.ப.,
ஆணையர்,
இந்து சமய அறநிலையத்துறை,
119, உத்தமர் காந்தி சாலை,
நுங்கம்பாக்கம்,
சென்னை–34

நகல்

மாநில பொது செயலாளர்,
தமிழ்நாடு உடல் ஊனமுற்றோர் சங்கங்களின் கூட்டமைப்பு,
எண்.21, ஏ, ஏரிக்கரை சாலை,
கோட்டூர், சென்னை–85.